# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.34/2022 | Date | : | 26-03-2026 |
| Deposition of Witness for | : | அ.சா.4 | Taluk | : | |
| Name | : | திருமதி.தேவி | Calling | : | |
| Father/Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.03.2026.

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், வேலகவுண்டம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் ஆண்டு சங்ககிரி வட்ட காவல் ஆய்வாளராகப் நான் பணியில் இருந்தபோது, கடந்த 02.11.2021ம் தேதி, காலை சுமார் 06.00 மணிக்கு தேவூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.முருகன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, தேவூர் கிராமம், மேட்டுக்கடை, குடித்தெருவை சேர்ந்த பால்ராஜ் (எ) பாலுவின் மனைவி வள்ளி, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின் பேரில் தேவூர் காவல் நிலைய குற்ற எண்.220/2021, சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலை, வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, இவ்வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2) பின்னர், இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு நான் அன்றைய தினமே, காலை சுமார் 07.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ரவிச்சந்திரன் மற்றும் சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றேன். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சம்பவயிட சாட்சி அருணகிரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர், அன்றைய தினமே, குமாரபாளையம் அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன பால்ராஜ், என்பவரின் பிரேதத்தின் மீது காலை 10.00 மணிமுதல் காலை 12.00 மணி வரை பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்பாக பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். பின்னர் பிரேதத்தை இறப்பிற்கான காரணம் அறிய பிரேத பரிசோதனை செய்ய வேண்டி விபத்தில் இறந்துபோன பால்ராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய தேவூர் தலைமை காவலர் திரு.ஞானசேகரன், என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். (**பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் பிரேத விசாரணை சாட்சிகள் மோகனபிரியா, ஐயப்பன், கமலா, தமிழரசி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் ஆனந்தன், த/பெ.தங்கவேல், என்பவர் TN 52 L 6122 என்ற பதிவு எண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனத்தினை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும்

ஓட்டிசென்று விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து இவ்வழக்கின் எதிரி ஆனந்தன், த/பெ.தங்கவேல், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 24.11.2021ம் தேதி, மாலை சுமார் 04.00 மணிக்கு தேவூர் காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்தேன்.

5) பின்னர், கடந்த 25-11-2021ம் தேதி, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 52 L 6122 என்ற பதிவு எண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனம் மற்றும் TN 52 F 7732 என்ற பதிவு எண் கொண்ட Honda Unicorn இருசக்கர வாகனம் ஆகியவற்றை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளேன்.

6) பின்னர், கடந்த 26-01-2022 ம் தேதி, இவ்வழக்கில் இறந்துபோன பால்ராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த குமாரபாளையம் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி.பிரீத்தா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன் (**பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

7) பின்னர், அன்றைய தினமே, எடப்பாடி செந்தில் மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் அடிப்பட்ட அருணகிரி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.செந்தில்ராஜா, என்பவரை விசாரித்து விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன் (**அருணகிரி என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

8) பின்னர், மருத்துவர் அருணகிரிக்கு சாதாரண காயம் என்று காயச்சான்றிதழ் வழக்கியதாலும், எதிரி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாலும் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவை 279, 304(A) இதச-பிரிவிலிருந்து சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) IPC and 3 r/w 181 MV Act-ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். (**சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

9) பின்னர், அன்றைய தினமே, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனங்களான TN 52 L 6122 என்ற பதிவு எண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனம் மற்றும் TN 52 F 7732 என்ற பதிவு எண் கொண்ட Honda Unicorn இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாரான திரு.சரவணபவன், என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைள் பெற்றேன். ( **TN 52 L 6122 என்ற பதிவு எண் கொண்ட Hero Splendor இருசக்கர வாகனம் மற்றும் TN 52 F 7732 என்ற பதிவு எண் கொண்ட Honda Unicorn இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் ஆகியவை கு.வி.மு.ச. பிரிவு 294-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) பின்னர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.முருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன்

இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து  எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 279, 337, 304(A) IPC and 3 r/w 181 MV Act-ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை** :-

1) விபத்தில் இறந்தபர் எதிரியின் வாகனத்தில் லிப்ட் கேட்டு சென்றார் என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் எங்கிருந்து எங்கு சென்றார் என்றால் குமாரபாளையத்தில் இருந்து தேவூர் நோக்கி சென்றார். சம்பவ இடத்திற்கு அருகே வேகத்தடை இருந்ததா என்றால் இல்லை. விபத்திற்குள்ளான வாகனம் எங்கிருந்து எங்கு சென்றது என்றால் தேவூரில் இருந்து குமாரபாளையம் நோக்கி சென்றது. விபத்திற்குள்ளான வாகனத்தில் சென்ற நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான்.

2) விபத்தில் இறந்தவரின் மனைவி தான் அ.சா.1 என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் சம்பவத்தன்று மதுபோதையில் வந்தாரா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. இவ்வழக்கில் விபத்திற்குள்ளான வாகனத்தின் ஓட்டுநர் தான் அ.சா.2 என்றால் சரிதான். அவரை தவிர கண்ணுற்ற சாட்சிகள் வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

3) விபத்தில் இறந்த நபர் மதுபோதையில் வந்தார் என்றும், சம்பவ இடத்திற்கு அருகே இருந்த வேகத்தடையில் வாகனம் ஏறி இறங்கும்போது தவறி கீழே விழுந்து விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. இறந்தவரின் குடும்பத்தினருக்கு நஷ்டஈடு பெற்றுத்தர வேண்டி பொய் புகார் பெற்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Devi